**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி**

**முன்னிலை – திரு. S.K.P. திலிப்பாபு, M.A., M.L.,**

**நீதிமன்ற நடுவர், காட்பாடி**

**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 18–ம் நாள் புதன்கிழமை**

**CC.No.45/2026**

**CNR.NO. TNVL – 24 – 000336 – 2026**

அரசுக்காக காவல் ஆய்வாளர் மூலமாக,

காட்பாடி காவல் நிலையம்,

குற்றஎண்.472/2024

U/s.4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT

……………..குற்றமுறையீட்டாளர்

// எதிர்//

கதிர்வேல், த/பெ. பலராமன்,

நெ.18 அவ்வை தெரு,

திருவள்ளுவர் நகர்,

காட்பாடி தாலுக்கா,

வேலூர் மாவட்டம்.

……………..குற்றஞ்சாட்டப்பட்ட நபர்

| Sl.No | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | எதிரியின் விவரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | தந்தையின்/ கணவர்பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | காட்பாடி காவல் நிலையம், குற்றஎண்.472/2024 U/s.4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT | கதிர் வேல் | பலராமன், | -- | நெ.18 அவ்வை தெரு, திருவள்ளுவர் நகர், காட்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம். | 53 |

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

| நிகழ்வு நாள் | புகார் கொடுத்த நாள் | எதிரியை கைது செய்த நாள் | எதிரியை பிணையில் விடுவித்த நாள் | சிறைக்குஅனுப்பிவைத்தது | வழக்கு விசாரணை ஆரம்ப நாள் | வழக்கு விசாரணை முடிந்த நாள் | தண்டனை உத்தரவு | குற்றவாளி கள் மீதான தீர்ப்புரைக்குரிய தீர்வு முடிவின் நகலை ஒப்படைத்தல் | கால தாழ்விற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 24.12.24 | 24.12.24 | 24.12.24 | 03.01.25 | 24.12.24 | 25.02.26 | 10.03.26 | 18.03.26 | -- | NO DELAY |

இவ்வழக்கானது 18.02.2026-ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு தன் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பாலாஜி அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

கடந்த 24.12.2024 –ம் தேதி காலை 07.00 மணிக்கு காட்பாடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காட்பாடி திருவள்ளுவர் நகர் எதிரி வீட்டின் பின்புறம் உள்ள முட்புதரிடம் போகும் போது இக்குற்ற வழக்கில் கண்ட எதிரி, நெ.18, அவ்வை தெரு, திருவள்ளுவர் நகர், காட்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் அரசு மதுபான கடையிலிருந்து மதுபான பாட்டில்களை வாங்கிவந்து எந்தவித அரசு அனுமதியில்லாமலும் தான் வைத்து கொண்டு சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்துக்கொண்டிருந்தது சட்டப்பிரிவு 4(1)(A),4(1) (C) TNP Amendment ACT –ன் படி எதிரியாகிய உம் மீது காட்பாடி காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணநகல்கள் அனைத்தும் பாரதிய நாகரிக் சுரக்ஷா பிரிவு 230–ன்கீழ் இலவசமாக வழங்கப்பட்டு அவைகளை பரிசீலனை செய்து பார்க்க தகுந்த சந்தர்ப்பமும் வாய்ப்பும் அளிக்கப்பட்டது.

**3.** பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலணை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும் வழக்கிற்கான முகாந்திரம் உள்ளதால் எதிரி மீது பிரிவு 4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT ன் கீழ் குற்றச்சாட்டுகள்

வனைந்து குற்றம் பற்றி வினவ எதிரி குற்றத்தை பொய் என மறுத்துரைத்தனர். எனவே அரசுதரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் ஆவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**5. <u>அரசுதரப்பு வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தின் விபரம் பின்வருமாறு</u>**

**அ)** அ.சா.1 புகேழந்தி, தான் தற்போது காட்பாடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 24.12.2024 ம் தேதி தானும் வினோத்குமார் உதவி ஆய்வாளர் சூரபதுமன், மற்றும் காவலர் வினோத்குமார் ஆகியோருடன் மதுவிலக்கு சம்மந்தமாக காட்பாடி திருவள்ளுவர் நகர் அருகே சென்றோம் என்றும், அப்போது காலை 7 மணியளவில் 2 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது ஒருவர் மதுபாட்டிலை கொடுக்க ஒருவர் வாங்கி கொண்டிருந்தார் என்றும், வாங்கி கொண்டிருந்த நபர் தங்களை பார்த்த உடன் ஓடிவிட்டார் என்றும், ஆஜர் எதிரியை பரிசோதனை செய்த போது 180 மிலி அளவு கொண்ட டைமண்ட் ரம் 30 மது பாட்டில்களை வைத்திருந்தார் என்றும், அவரை உதவி ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்தார் என்றும், எதிரி எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தனாக

முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தன்னுடன் வினோத் என்பவரும் கையொப்பம் செய்தார் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், பின்னர் வழக்கு சொத்து எதிரியுடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்குட்படுத்தினார் என்றும், உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**ஆ)** அ.சா.2 வினோத் இந்நீதின்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது காட்பாடி காவல் நிலையத்தில் காவரலாக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 24.12.2024 ம் தேதி தானும் உதவி ஆய்வாளர் சூரபதுமன், மற்றும் காவலர் புகழேந்தி ஆகியோருடன் மதுவிலக்கு தடுப்பு சம்மந்தமாக காட்பாடி திருவள்ளுவர் நகர் அருகே சென்றோம் என்றும், அப்போது காலை 7 மணியளவில் 2 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது ஒருவர் மதுபாட்டிலை கொடுக்க ஒருவர் வாங்கி கொண்டிருந்தார் என்றும், வாங்கி கொண்டிருந்த நபர் தங்களை பார்த்த உடன் ஓடிவிட்டார் என்றும், ஆஜர் எதிரியை பரிசோதனை செய்த போது 180 மிலி அளவு கொண்ட டைமண்ட ரம் 30 மது பாட்டில்களை வைத்திருந்தரர் என்றும், அவரை உதவி ஆய்வாளர்

காரணம் கூறி கைது செய்தார் என்றும், எதிரி எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தனாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தன்னுடன் புகழேந்தி என்பவரும் கையொப்பம் செய்தார் என்றும், வழக்கு சொத்தை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்குட்படுத்தினார் என்றும், உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

இ) அ.சா.3 சூரபதுமன் இந்நீதின்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது வேலூர் மாவட்ட காட்பாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 24.12.2024 ம் தேதி காலை 07.00 மணிக்கு தானும், தலைமை காவலர் புகழேந்தி மற்றும் காவலர் வினோத் ஆகியோருடன் மதுவிலக்கு சம்மந்தமாக காட்பாடி திருவள்ளுவர் நகர் ஔவை தெரு வழியாக கண்காணித்து சென்ற போது அந்த இடத்தில் முட்புதரில் அங்கு வந்த நபர்களிடம் ஏதோ விற்பனை செய்து கொண்டிருந்தார் என்றும், அவரை பரிசோதனை செய்த போது அவரிடம் 180 மிலி அளவு கொண்ட 30 பாட்டில்கள் இருந்ததது என்றும், அதை கைப்பற்றி அவரை

விசாரித்தபோது எதிரி விற்பனை நோக்கத்திற்காக எடுத்து செல்வதாக கூறினார் என்றும், பின்னர் எதிரியை கைது செய்து எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் புகழேந்தி, வினோத் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன் என்றும், பின்னர் டைமண்ட் XXX RUM 180 மிலி அளவு கொண்ட 30 பாட்டில்கள் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன் என்றும், பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண் 472/2024, சட்டபிரிவுகள் 4(1)(a),4(1)(c) TNP AMENDMENT ACT 2024 ன் படி பதிவு செய்தேன் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் எதிரியை தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன் என்றும், வழக்கு சொத்து காவல்நிலையத்தில் இருந்த போது சேதம் அடைந்து விட்டதால் படிவம் 91 மூலமாக நீதிமன்றம் அனுப்ப இயலவில்லை அதற்காக தனிஅறிக்கை தயார் செய்து நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளேன் என்றும், அந்த தனி அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 4(1)(A).4(1)(C) TNP AMENDMENT ACT படி 28.05.2025 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**6)** இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.3 அரசுதரப்பு சாட்சிகள் எதிரிக்கு பாதகமாக அளித்த சங்கதிகள் குறித்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா

பிரிவு 351(1)(பி)–ன் கீழ் வினவ எதிரி அந்தப்பகுதிகளை பொய் என மறுத்துரைத்தனர். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறினர். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. <u>தீர்வுக்குரியபிரச்சனை</u>

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், அரசுதரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றமானது அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.

8). இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவு 104 ன்படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொறுப்பு அரசுதரப்பை சார்ந்ததாகும்.

9) அரசுதரப்பில் எதிரிக்கு எதிரான குற்றசாட்டினை பொறுத்து நிரூபணம் செய்வதற்கு அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளை விசாரணை செய்து, மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடுசெய்து, எதிரிக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

10) எதிரி தன்மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு

செய்யப்பட்டுள்ளதாகவும், தனக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், குற்றசம்பவத்தை பொறுத்து தன்மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறி வாதிடப்பட்டது.

11) அ.சா.1 மற்றும் அ.சா.2 இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூலம், மற்றும், கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் ஆவார்கள். அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 24.12.2024 ம் தேதி தானும் வினோத்குமார் உதவி ஆய்வாளர் சூரபதுமன், மற்றும் காவலர் வினோத்குமார் ஆகியோருடன் மதுவிலக்கு சம்மந்தமாக காட்பாடி திருவள்ளுவர் நகர் அருகே சென்றோம் என்றும், ,அப்போது ஒருவர் மதுபாட்டிலை கொடுக்க ஒருவர் வாங்கி கொண்டிருந்தார் என்றும், வாங்கி கொண்டிருந்த நபர் தங்களை பார்த்த உடன் ஓடிவிட்டார் என்றும், ஆஜர் எதிரியை பரிசோதனை செய்த போது 180 மிலி அளவு கொண்ட டைமண்ட் ரம் 30 மது பாட்டில்களை வைத்திருந்தார் என்றும், அவரை உதவி ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்தார் என்றும், எதிரி எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தனாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தன்னுடன் வினோத் என்பவரும் கையொப்பம் செய்தார் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், பின்னர் வழக்கு சொத்து எதிரியுடன் நிலையம் வந்து உதவி

ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்குட்படுத்தினார் என்றும், உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் கடந்த 24.12.2024 ம் தேதி தானும் உதவி ஆய்வாளர் சூரபதுமன், மற்றும் காவலர் புகழேந்தி ஆகியோருடன் மதுவிலக்கு தடுப்பு சம்மந்தமாக காட்பாடி திருவள்ளுவர் நகர் அருகே சென்றோம் என்றும், அப்போது காலை 7 மணியளவில் 2 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது ஒருவர் மதுபாட்டிலை கொடுக்க ஒருவர் வாங்கி கொண்டிருந்தார் என்றும், வாங்கி கொண்டிருந்த நபர் தங்களை பார்த்த உடன் ஓடிவிட்டார் என்றும், ஆஜர் எதிரியை பரிசோதனை செய்த போது 180 மிலி அளவு கொண்ட டைமண்ட ரம் 30 மது பாட்டில்களை வைத்திருந்தரர் என்றும், அவரை உதவி ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்தார் என்றும், எதிரி எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தனாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தன்னுடன் புகழேந்தி என்பவரும் கையொப்பம் செய்தார் என்றும், வழக்கு சொத்தை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்குட்படுத்தினார் என்றும், உதவி ஆய்வாளர் தன்னை

விசாரித்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

12) அ.சா.3 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் வழக்கை எடுத்துக்கொண்டு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்ததை பற்றியும், முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததை பற்றியும், சாட்சியம் அளித்துள்ளார். இறுதியாக இறுதி அற்க்கை தாக்கல் செய்ததை பற்றியும் தாக்கல் செய்துள்ளார்கள். அவரது சாட்சியம் வழக்கு விசாரணைக்கு ஒத்தியதே ஆகும். அவரது சாட்சியம் புலன் விசாரணை சார்ந்தது ஆகும். எதிரியை இவ்வழக்கோடு தொடர்புபடுத்த அரசுத்தரப்பில் வேறு எந்தவொரு சாட்சியும் முன்னிலைபடுத்தவில்லை.

13) மேற்படி வழக்கில் பொதுநபர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கவில்லை. அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ளவர்கள் ஒரே காவல் நிலையத்தில் பணிபுரியும் நபர்கள் ஆவார்கள். அவர்கள் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி மேற்படி குற்றத்தை செய்திருப்பார் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வர முடியாது.

14) மேற்படி வழக்கில் அனைத்து செயல்முறைகளும் சட்டப்படி பின்னபற்றபட்டதா என்று நீதிமன்றம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சட்டப்பிரிவு 32 TNP AMENDMENT ACT–ன் படி மதுபானத்தை ஆய்வாளர் அல்லது Prohibition Officer முன்னிலையில் தான் மாதிரி எடுத்து மீதமுள்ள மதுவை ஆய்வாளர் அல்லது Prohibition Officer முன்னிலையில் அழித்து எடுத்த மாதிரி நீதிமனறத்திற்கு அனுப்ப

வேண்டும்.

15) The Hon'ble High Court of Madras in Selvi vs State has held that

*"A close reading of the above third proviso to Section 32 (c) of the Tamil Nadu Prohibition Act would make it abundantly clear that the officer who has seized the illicit arrack can draw samples only in the presence of a prohibition officer or any police officer not below the rank of an Inspector of Police and then he can destroy the remaining contraband. In respect of the destruction, the said prohibition officer or police officer, in whose presence the destruction is done, should give a certificate in respect of the total quantity seized, the total quantity taken as samples and total quantity destroyed and such certificate should be forwarded to the Magistrate having jurisdiction. But, in this case, drawing of samples as well as the destruction were not made in the presence of either a prohibition officer or any police officer not below the rank of an Inspector of Police. It may be true that*

*P.W.8 himself is an Inspector of Police but that by itself will not satisfy the requirements of the above provision. Here, we have to look into the object behind the said proviso. In a case where the officer, who seizes illicit arrack, decides to destroy the same after drawing samples, in order to ensure that samples were really taken from the illicit arrack seized and that the rest of the illicit arrack was destroyed, the presence of yet another responsible officer namely, a prohibition officer or any police officer not below the rank of Inspector is insisted upon. This procedure, in my considered opinion, is mandatory as the object behind the same is to ensure that there is no manipulation at the hands of the officer who seizes the illicit arrack."*

*16)* The Hon’ble High Court of Madras in Senthil Prabhu vs State has held that

*"In the considered view of this Court, a police officer, who seizes illicit arrack must draw the samples only in the presence of a prohibition officer or any police officer not below the rank of Inspector of Police and destroy the remaining contraband. This procedure is mandatory since the object behind the same is to ensure that there is no mainpulation at the hands of the police officer who seizes the illicit arrack. The issue is squarely covered by the earlier judgment of this Court in (Selvi Vs State represented by Inspector of Police, Rasipuram Police Station, Namakkal District) reported in 2011(2) MWN (Crl.) 623."*

17) மேற்கண்ட வழக்கில் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் என்ற அடிப்படையிலும், மேற்கண்ட உயர் நீதிமன்ற வழிகாட்டு நெறிமுறைகளை சரியாக பின்பற்றபடவில்லை என்றும், ஆய்வாளர் அல்லது Prohibition Officer முன்னிலையில் மாதிரி எதுவும் எடுக்காமல் உதவி ஆய்வாளர் முன்னிலையில் சம்பவ இடத்திலேயே மொத்த வழக்கு சொத்தையும் அழித்ததால் எந்த மாதிரியும் எடுக்காததால் பிரிவு 32 TNP ACT –ன் படி இந்த வழக்கின் விசாரணை அதிகாரி முறையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றததால் அந்த பலனை எதிரிக்கு வழங்கி அவரை விடுதலை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18) எனவே இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 வரை சாட்சியமாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் மூலம் எதிரியின் மீதான பிரிவுகள் 4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT–ன் கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசுதரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை, எனவே எதிரி மேற்படி பிரிவுகளின் கீழான குற்றத்தில் குற்றவாளி என்பதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுதரப்பில் நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>19) முடிவாக</u>**

i) எதிரிக்கு எதிரான பிரிவுகள் 4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT–ன் கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரியின் சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என முடிவுசெய்து பாரதிய நாகரிக் சுரக்க்ஷா சன்ஹிதா 271(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்பு என்னால் பகரப்பட்டது

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | புகழேந்தி |
| அ.சா.2 | வினோத் |
| அ.சா.3 | சூரபதுமன்(விசாரணை அதிகாரி) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | சான்றாவண விபரம் |
|---|---|
| அ.சா.ஆ.1 | ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ 4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ 5 | தனி அறிக்கை |

எதிரி தரப்பு சாட்சி : இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : இல்லை

**<u>குறிப்பு</u>**

1. வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல்நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரி காவல்நிலைய பிணையில் இருந்தார்.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.